25 NOV 1982

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982, மார்ச் 6

துன்மதி, மாசி 22, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

செயங்கொண்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 381—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், செயங்கொண்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இந்தத் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் முந்திரி தொழிலில் எத்தனை பேர்கள் ஈடுபட்டுள்ளனர்? இந்த தொழிலை அபிவிருத்தி செய்ய அரசிற்கு முற்போக்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி தொழிற்சாலை பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பேர் இதிலே ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் நாட்டில் 171 முந்திரி பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே கன்னியா குமரி மாவட்டத்திலே 156 தொழிற்சாலைகள் இருக்கின்றன.

ஆனால் போதுமான முந்திரி பருப்புகள் அவர்களுக்கு கிடைக் காத காரணத்தால் தன்னிறைவை பெறவேண்டுமென்ற நோக் கோடு தமிழக அரசு உலக வங்கியுடன் 37 கோடி ரூபாய் முதலீட்டில் வரும் ஐந்தாண்டுகளில் முந்திரி உற்பத்தியை பெருக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்பது மாவட்டங்களிலே உலக வங்கி உதவியுடன் 37 கோடி ரூபாய் முதலீட்டில் செயல் படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொலகிறபோது இந்தத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான அவசியம் இல்லையென்று சொன்னார்கள். வருங்காலத்தில் நாம் உலக வங்கியிடம் கடன் வாங்கி முந்திரித் தொழிலை அபிவிருத்தி செய்கிற நிலை அரசிடம் இருக்கிறதென்று சொன் னார்கள். திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுகா மிகவும் பின்தங்கிய தாலுகா என்பது மட்டுமலல, அங்கே முந்திரி அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 100 ஏக் கரில் அந்த தாலுகாவில முந்திரி மரங்கள் இருக்கின்றன. தன் னிறைவு என்பதற்கு உலக வங்கி மூலம் கடன் வாங்கி முந்திரி உற்பத்தி செய்வோம் என்பதால் அபிவிருத்தி என்று சொல்வதில் உடையார்பாளையம் தாலுாகவை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதில் அளிக்கிற போது திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், செயங்

1982 மார்ச் 6]

கொண்டத்திலே தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இல்லையென்று சொன்னேன். இந்த தொழில் வளர்வதற்கு திட்டமில்லை என்று சொல்லவில்லை. ஒன்பது மாவட்டங்களிலே வரும்போது திருச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கித்தான் அது வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி தொழிற்சாலைக்கு மூலப் பொருள் இல்லாததினால் பல தடவை தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. இதற்காக மத்திய அரசாங்கத்தால் போடப்பட்டிருக்கிற கமிட்டியில் தமிழ்நாட்டிற்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பது உண்மையா? அந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மத்திய அமைப்பில் தமிழ்நாட்டிற்குப் பிரதிநிதித்துவம் இல்லை. பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி எழுதியிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவரவர்களே, முந்திரி உற்பத்தித் தமிழ்நாட்டிலே புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஆதனூர் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு பல மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது. எனவே, கந்தர்வக்கோட்டையில் ஒரு முந்திரித் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கே மூலப்பொருள்கள் இல்லை என்பதுதான் பிரச்னை. இருந்தாலும் முந்திரி வளர்கின்ற நேரத்தில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சே. சசாக்கலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே முந்திரித் தொழிற்சாலை அமைப்பது குறித்து அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையில் என்னென்ன தயாரிக்கப்படுகிறது? முந்திரிக் கொட்டையின் தோல் ஆயில் தயாரிப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னென்ன ஆயில்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், பொதுவாக முந்திரிக்கொட்டையிலிருந்து

எண்ணெய், ஜாம், பழச்சாறு தயாரிக்க பல ஆய்வுத் திட்டங்கள் அரசின் தொழில்துறையிடத்தில் இருக்கின்றன. அது தொடர்ந்து செயலாக்கப்படும்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவரவர்களே, உற்பத்தி செய்யப்படும் முந்திரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது ? என்னென்ன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? குமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற முந்திரி தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுமதியாக வில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு : பேரவைத் தலைவரவர்களே, முந்திரி உற்பத்தி செய்யும் மாவட்டங்கள் ஒன்பது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவை எந்தெந்த மாவட்டங்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இப்பொழுது என்னிடத்தில் இல்லை ஆனால், 9 மாவட்டங்களில் தென்னார்க்காடு மாவட்டமும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களில் வடஆற்காடு மாவட்டமும் இருக்குமா என்று அறியவிரும்புகிறேன். அப்படி இல்லாவிட்டாலும்கூட, அது பின் தங்கிய மாவட்டமாக இருப்பதால் வளர்ச்சியுறவும், அன்னியச் செலாவாணியைப் பெறும் முறையிலும் அந்தத் தொழில்களை விஸ்தரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு எங்கேயோ இருக்கிறது. ஆனால், அதுபற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாகக் கொடுக்கிறேன்.